செ.வெ.எண்:27 நாள்: 20.03.2019

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் செலவினங்கள் தொடர்பான ஆய்வுக்கூட்டம்**

**தேர்தல் செலவின கண்காணிப்பாளர் திரு.சஞ்சய் முகர்ஜி இ.வ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் செலவினங்கள் குறித்து இன்று (20.03.2019) நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தேர்தல் செலவின கண்காணிப்பாளர் திரு.சஞ்சய் முகர்ஜி இ.வ.ப.,அவர்கள் தெரிவித்ததாவது…

பாராளுமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தேர்தலுக்காக மேற்கொள்ளப்படும் செலவினம், வேட்புமனு தாக்கல் செய்யும் நாளிலிருந்து தேர்தல் முடிவும் அறிவிக்கப்பட்ட நாள்வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் வேட்பாளரின் தேர்தல் செலவுக்கணக்காக கருதப்படும். பொதுகூட்டங்கள், சுவரொட்டிகள், தட்டிகள், வண்டிகள், செய்தித்தாள் அல்லது மின்னணு ஊடகத்தில் விளம்பரங்கள் போன்ற பிரச்சாரங்களும், வாக்காளர்களை கவரும் நோக்கத்துடன் அவர்களுக்கு பணம், மது அல்லது பரிசு மற்றும் வேறுபொருட்களை வழங்குவதும் வேட்பாளரின் செலவுக் கணக்கில் அடங்கும். தேர்தல் முடிவு வெளியான நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தேர்தல் செலவின் உண்மையான கணக்கை அளிக்க வேண்டும். தேர்தலுக்கான அனைத்து செலவுகளையும், தேர்தலுக்காக துவங்கப்பட்ட வங்கிக்கணக்கிலிருந்து மட்டுமே செய்ய வேண்டும்.

ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் பிரச்சாரத்திற்காக அவரால் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்கள் பற்றிய தகவல்களை மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு அளித்து அவற்றை பயன்படுத்துவதற்கான அனுமதியினை தேர்தல் நடத்தும் அதிகாரியிடமிருந்து பெற வேண்டும். தேர்தல் நடத்தும் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட வாகன பயன்பாட்டிற்கான அனுமதியினை வாகனத்தின் முன்பக்கத்திரையில் காட்சிக்கு தெரியுமாறு வைக்க வேண்டும்.

மேலும் அனைத்து பதிவேடு, தேர்தல் பிரச்சார காலத்தில் குறைந்தது மூன்று முறையாவது தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் செலவின பார்வையாளர் அவர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அனைத்து

பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் வீடியோ படப்பிடிப்பு செய்யப்படும். இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி வேட்பாளரின் தேர்தல் செலவினங்கள் குறித்து கண்காணிக்கப்படும்.

இன்றைய தினம் (20.03.2019) நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் வேட்பாளர்கள் செலவினத்திற்காக புதிய வங்கி கணக்கு துவங்குதல், செலவினங்கள் குறித்த வரையறை, மொத்தமாக பொருட்கள் வாங்குவதை கண்காணிப்பு செய்வது, 10000/-ற்கு மேல் செலவினங்கள் ECS, NEFT, RTGS மற்றும் காசோலையாக செலவு செய்தல் ரூ.50,000/- ற்கு மேல் ஒரே நபர் தொடர்ந்து வங்கியில் எடுப்பதை கண்காணித்தல், வேட்பாளரின் வரவு செலவுகளை உதவி செலவின பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் மற்றும் ஒத்திசைவு செய்தல் போன்றவைகள் குறித்து அலுவலர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது" என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எம்.இந்துமதி, உதவி இயக்குநர் வருமானவரி ( விசாரனை அலுவலர் ) திரு.ஜே.நாகராஜ் (இ.வ.ப) சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.எம்.வேலுமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) திரு.வெங்கடேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார் மற்றும் மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் சட்டமன்ற தொகுதிகளின் உதவி செலவின பார்வையாளரின் பறக்கும் படை அலுவலர்கள், நிலையான ஆய்வுக்குழு அலுவலர்கள், வீடியோ கண்காணிப்பு குழு அலுவலர்கள் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**